# தமிழ்நாடு அரசு

## சுருக்கம்

ஆட்சி எல்லை – மாவட்டங்கள்/கோட்டங்கள்/வட்டங்கள் பிரித்தல் (Norms) அளவுகோல் நிர்ணயித்தல் – ஆணைகள் வெளியிடப்படுகிறது.

---

## வருவாய்த்துறை

அரசு ஆணை (நிலை) எண் 279

நாள்: 9.6.2003

படிக்கவும்:

1. முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் கடித எண் பணி 6(4)/76646/01, நாள் 19.3.02.
2. சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் கடித எண் பணி 6(4)/76646/01-6, நாள் 7.8.02.
3. இணை ஆணையர் (வ.நி.) கடித எண் பணி 6(4)/76646/01-10 நாள் 8.11.02.

---

ஆணை:-

முன்னாள் முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர், மாவட்டங்கள்/கோட்டங்கள்/வட்டங்கள் பிரிப்பது தொடர்பான அளவுகோலை (குறித்த நிலை) நிர்ணயிப்பது குறித்து செயற்குறிப்பினை அனுப்பியிருந்தார். அச்செயற்குறிப்பு குறித்து முன்னாள் தலைமைச் செயலர் 12.7.02 அன்று கூட்டிய கூட்டத்தில் விவாதித்து முடிவெடுத்த பிறகு, தற்போதைய சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர், மாவட்டங்கள்/கோட்டங்கள்/வட்டங்கள் பிரிப்பது தொடர்பாக அளவுகோல் நிர்ணயிக்க முன்மொழிந்துள்ளார்.

2. முன்னாள் முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் மற்றும் தற்போதைய சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர், ஆகியோர் மாவட்டங்கள்/கோட்டங்கள்/வட்டங்கள் பிரிப்பது தொடர்பாக முன்மொழிந்துள்ள, குறித்த நிலையை (அளவுகோலை) ஆதாரமாக கொண்டு, மக்கள் தொகை, பரப்பு மற்றும் கிராமங்கள் ஆகியவற்றை ஒத்திசைந்து, அளவுகள் கொண்ட ஒப்புநோக்கு பட்டியலுடன் ஆய்வு செய்யப்பட்டது. இப்பொருள் குறித்து முன்னாள் தலைமைச் செயலாளரால் 6.9.2002 அன்று வருவாய்த்துறை செயலர் மற்றும் சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் ஆகியோருடன் கலந்தாய்வு செய்யப்பட்டது. அதனடிப்படையில் தலைமைச் செயலர் தெரிவித்துள்ளபடி, திருத்திய குறித்தநிலை (அளவுகோல்) அனுப்புமாறு சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்பட்டார். ஆனால், ஏற்கனவே சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் முன்மொழிந்துள்ள குறித்த நிலையில் (அளவுகோலில்) எவ்வித மாற்றமும் இல்லையென்று வருவாய் நிர்வாகத்துறை இணை ஆணையர் அரசுக்கு தெரிவித்துள்ளார்.

3. ஆட்சி எல்லைகளைப் பிரித்தல்/மறுசீரமைத்தல் தொடர்பாக அளவு நிர்ணயிக்கப்பட்ட முன்மொழியப்பட்ட கருத்துருக்களை அரசு நன்கு ஆய்வு செய்தது. அதன்படி ஒவ்வொரு உள்வட்டம், வட்டம், கோட்டம் மற்றும் மாவட்டத்திற்கு சராசரியாக எத்தனை வருவாய்

(த.பி.பா.)

கிராமங்கள், உள்வட்டங்கள், வட்டங்கள், கோட்டங்கள் அமையப்பெறும் என்றும், தமிழ்நாட்டின் மக்கள் தொகை பரப்பு ஆகியவற்றுடன் ஒப்புநோக்கு செய்யப்பட்டதில், மற்ற முன்மொழிவை சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையரால் முன்மொழியப்பட்டவை, தற்பொழுதுள்ள அலகுகளின் பெரும்பகுதி திருத்தியமைக்கப்படாததாக இருப்பதால், அவையே மாவட்டங்கள்/கோட்டங்கள்/வட்டங்கள் எதிர்காலத்தில் பிரிப்பதற்குரிய அளவுகோலாக (குறித்த நிலையாக) ஏற்கலாம் என கருதி, கீழ்க்கண்ட அளவுகோலைப் (குறித்த நிலையைப்) பின்பற்ற அரசு முடிவுசெய்கிறது.

| வ.எண் | ஆட்சி எல்லை | பரப்பு | மக்கள் தொகை | வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை | வட்டங்களின் எண்ணிக்கை | கோட்டங்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1. | வட்டம் | குறைந்தளவு 250 ச.கி.மீ. முதல் அதிகளவு 2000 ச.கி.மீ. | குறைந்தளவு 1,00,000 முதல் அதிகளவு 5,50,000. | குறைந்தளவு 30 கிராமங்கள் | -- | --- |
| 2. | கோட்டம் | குறைந்தளவு 1000 ச.கி.மீ. முதல் அதிகளவு 4500 ச.கி.மீ. | குறைந்தளவு 4,00,000 முதல் அதிகளவு 15,00,000 | குறைந்தளவு 100 கிராமங்கள். | குறைந்தளவு 2 வட்டங்கள் | -- |
| 3. | மாவட்டம் | குறைந்தளவு 2500 ச.கி.மீ. முதல் அதிகளவு 9000 ச.கி.மீ. | குறைந்தளவு 10,00,000 முதல் அதிகளவு 30,00,000. | குறைந்தளவு 200 கிராமங்கள். | குறைந்தளவு 5 வட்டங்கள் | குறைந்தளவு 2 கோட்டங்கள். |

4. மேலும், முன்னாள் முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் மற்றும் தற்போதைய சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் ஆகியோரால் தெரிவிக்கப்பட்டுள்ள பின்வரும் கருத்துக்களையும் முடிவுகளை எதிர்காலத்தில் மாவட்டங்கள்/கோட்டங்கள்/வட்டங்கள் பிரிக்கும்பொழுது பின்பற்றப்பட வேண்டும் என்றும் அரசு ஆணையிடுகிறது.

(i) பொருளாதார நிலத்தின் வேறுபாடுகள் வேறுபட்டுள்ளதால் ஆட்சி எல்லை பிரிப்பதற்கு நிலவரங்களை ஒரு காரணியாக எடுத்துக் கொள்ளலாம்;

(தொ.பா.)

(ii) அளவுகோல் (குறித்த நிலை) ( Norms ) பிரிக்கப்படும் புதிய மற்றும் பழைய அலகுகளில் பின்பற்றப்படலாம்; எனினும் மேற்குறிப்பிடப்பட்ட அளவுகோல் (குறித்த நிலை) சமபாங்கான பகுதிகளுக்கு மட்டும் செயல்படுத்தலாம். குன்றுகள் நிறைந்த மலைபாங்கான பகுதிகளுக்கு செயல்படுத்த வேண்டாம். பெருநகரப் பகுதியான சென்னை மாவட்டம், மலைப்பகுதியான நீலகிரி மாவட்டம், கன்னியாகுமரி மாவட்டம், சேர்க்கப்பட்ட பகுதி போன்ற சிறப்பு அம்சங்கள் நிறைந்துள்ளதால், அவைகளை தற்பொழுது செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள அளவுகோலில் (குறித்த நிலை) ( Norms ) உட்படுத்த வேண்டாம். எப்பொழுது மாவட்டங்கள்/கோட்டங்கள்/வட்டங்கள் பிரிக்கப்படுகிறதோ, அப்பொழுதெல்லாம், அவை அதிகளவு ( Maximum ) உத்தேசிக்கப்பட்டுள்ள அளவுகோலுக்கு மேற்படலாம். மேலும் பிரிக்கப்பட்ட மற்றும் பழைய அலகுகள் உத்தேசிக்கப்பட்டுள்ள அளவுகோலை பெற்றிருக்க வேண்டும்.

(iii) பொதுவாக, பிரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள வட்ட எல்லை இரண்டு அல்லது மூன்று ஊராட்சி ஒன்றியங்களை முழுமையாக உட்படுத்தியிருக்க வேண்டும். அது பொதுமக்களின் சங்கடத்திற்கு காரணமாக அமையுமாதலால் எந்த ஒரு ஊராட்சி ஒன்றியமும் இரண்டு வட்ட எல்லைக்குள் சேர்க்கக் கூடாது.

(iv) பிரிக்கப்பட்ட/மறுசீரமைக்கப்பட்ட மாவட்டங்களின் ஆட்சி எல்லை நிர்ணயிக்கும்போது, இயற்கை எல்லையாக அமையும் ஆறுகள், குன்றுகள், காடுகள் ஆகியவை முக்கிய காரணிகளாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

(v) தர்மபுரி மாவட்டத்தைப் பிரிப்பது குறித்து சட்டமன்ற பேரவையில் அறிவிக்கப்பட்டதால் அதனை ஒரு தனிப்பட்ட நேர்வாக எடுத்துக் கொள்ளலாம். இருப்பினும், எதிர்காலத்தில் எல்லையை சீர் அமைத்தல்/மறுசீரமைக்கப்படும் பொழுது அளவுகோல் (குறித்த நிலையை) பின்பற்றப்பட வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ந. சுந்தரதேவன்,
அரசு செயலாளர்.

பெறுநர்
சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர், சென்னை-5.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர்,
சென்னை-9.
வருவாய்த்துறை செயலரின் தனிச் செயலர், சென்னை-9.
இ.கோ. உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

11.6.2002
பிரிவு அலுவலர்.
11/6

வெ.கா.10.6.